



# புதிய பாரதம்

உயிரைக் காட்டிலும் மானம் பெரிது
அதுதான் நமது பண்பாடு - இதில்
தவறுதல் என்பது கிடையாது
தவறிடின், அதுவே முடிவாகும்!

நீதியைக்காக்க ஜீவனைத் தந்தான்
பாண்டிய மன்னன் அன்று - அந்தப்
பாதையில் அன்றோ பயணம் செய்வோம்
பாரத மக்கள் என்றும்!

சத்தியமே நம் மூச்சாகும்
தர்மம்தான் நம் பேச்சாகும்
எத்தனை யுகங்கள் ஆனாலும் - இந்தச்
சிந்தனை என்றும் மாறாது!

பிரிவினை பேசி பெருமையை இழந்த
காலம் சென்று மறைந்ததடா - புது
விடியலைக்கண்டு உலகே வணங்க
பாரதம் இன்று நிமிர்ந்ததடா!